

ஈரோடு வ.உ.சி விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா "இது நம்ம ஆட்டம் 2026 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஸ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கழக தலைவர் – முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பூத் வாரியாக கழக அரசின் சாதனையை மகளிர் அணி நிர்வாகிகளுடன், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் திருமயம் சட்டமன்றத் தொகுதி காரையூரில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வீடு வீடாகச் சென்று மக்களிடம் 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை விளக்கி கூறினார். உடன் பொன்னமராவதி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அ.முத்து மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு

# ‘வள்ளலார் நெடுஞ்சாலை’ எனப் பெயர் சூட்டப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.3 -

திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு ‘வள்ளலார் நெடுஞ்சாலை’ எனப் பெயர் சூட்டப்படும் என, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, முதல்வர் அவர்கள் வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**புதிய அறிவிப்பு : திருவொற்றியூர் நெடுஞ்சாலை, இனி வள்ளலார் நெடுஞ்சாலை!**

**நமது திராவிட மாடலில்,**

**வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள் ஓராண்டு தொடர்கொண்டாட்டமாக வள்ளலார் முப்பெரும் விழா**

**வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லம் புனரமைப்பு என,**

**வள்ளலாரின் புகழைப் போற்றுவதன் தொடர்ச்சியாக, அயல்நாட்டினரிடமும் வள்ளலாரின் உயரிய கருத்துகளைக் கொண்டு சேர்த்திட, வரும் பிப்ரவரி 15-ஆம் நாள் சென்னை கீழ்ப்பாக்கம் ஏகாம்பரநாதர் பள்ளி வளாகத்தில் அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026 நடத்தப்படும் என்றும்,;**

**மேலும், வள்ளலார் நெறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு ‘வள்ளலார் நெடுஞ்சாலை’ எனப் பெயர் சூட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்!**

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### 57வது நினைவு நாள் : ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில்

# பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவீர்!

## மாவட்டக் கழக செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி - தளபதி முருகேசன் - பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!







கோவை, பிப். 3 -

ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணியாக சென்று அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவீர் என்று கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன், மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் அறிக்கை விடுத்து ள்ளனர்.

அதன் விவரம் வருமாறு :காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலுவீற்றி ருக்கும் செந்தமிழறிஞர் ட்ட் தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்கா கவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல்தலைவர் எனப்புகழும், பெருமைகளும் பல கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு இன்று (03.02.2026 செவ்வாய்க்கிழமை) காலை 08.00 மணியளவில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தி.மு.கழகத்தின் சார்பாக அமைதிப் பேரணியாக சென்று பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், திருவுரு வச்சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்,


ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், துணை மேயர், நகராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், (பூத்) பாக பொறுப்பாளர்கள், BLA2 பாக நிலை முகவர்கள், BLC பாக நிலை உறுப்பினர்கள், கழக செயல் வீரர்கள், தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### 57வது நினைவு நாள் ! ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில்

# பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துவீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் – பொறுப்பாளர்கள் இல.பத்மநாபன் – கே.ஈஸ்வரசாமி - என்.தினேஷ்குமார் அறிவிப்பு!









திருப்பூர், பிப். 3 -

திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் கிழக்கு மாவட்டகழகப்பொறுப்பாளர், மாநகராட்சி4ம்மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் தெற்கு மாவட்டகழகப்பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி எம்.பி., திருப்பூர் வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் என்.தினேஷ்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழினம் கண்ட தனிப் பெருந்தலைவர், தாய் நாட்டுக்கு "தமிழ்நாடு" என்று பெயர்சூட்டியதகைமையாளர், இனம், மொழி காக்கும் அறப்போரில் இணையிலா வெற்றி பெற்ற இன்ப சூரியன், காஞ்சித் தலைவன், தென்னாட்டு காந்தி, இந்நாட்டு இங்கர்சால் எனப்புகழும், பெருமைகளும் பல கொண்ட பேரறிஞர் அண்ணாஅவர்களின்57வது நினைவுநாளைமுன்னிட்டு 03.02.2026 செவ்வாய்க்கிழமை இன்று காலை 08.00 மணியளவில் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள்நிர்வாகிகள் அனைவரும் தி.மு.கழகத்தின் சார்பாக அமைதிப் பேரணிகள்நடத்தியும், பேரறிஞர்அண்ணாஅவர்களின் திருவுருவச்சிலைக்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், திருவுரு வச்சிலைஇல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்,

இந்நிகழ்ச்சியில் மாநகர செயலாளர், பொறுப்பாளர், மாவட்டகழகநிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்ட கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற, நகர்மன்றஇன்னாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளானஇளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, தொண்டர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, வர்த்தகர்அணி, மருத்துவர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, வழக்கறிஞர்அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி உள்ளிட்ட அணிகளை சார்ந்ததலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், துணைதலைவர்கள், தொ.மு.ச.நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னணியினர்அனைவரும்தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# அந்தோ! அந்தப் பிப்ரவரி மூன்றாம்நாள்!



பங்காரு நடராசர்
பாருக்குக் கொடுத்த கொடை
பொங்கும் கடலோரம்
போய்ப்புதைந்த நாள்இதுதான்!
ஆவி தமிழ்க்கென்றே
அவதரித்த உயிர்க்கனியைப்
பாவி கொடுங்காலன்
பறித்துவிட்ட நாள்இதுதான்!

நினைந்துவைத்த ஆர்வத்தால்
நெக்குருகி, இயற்கைத்தாய்
புனைந்துவைத்த எழிற்கவிதைப்
பூ உதிர்ந்த நாள்இதுதான்!
புயல்கிளப்பித் தமிழ்நாட்டில்
பொழுதெல்லாம் கூவிவந்த
குயிற்பறவை சிறகொடுங்கிக்
கூடடைந்த நாள்இதுதான்!

வரம்கிடைக்கத் தவமிருந்து
வாய்த்ததுபோல், காதுகளில்
சுரம்வளர்த்த புதுக்குரலின்
சுருதிநின்ற நாள்இதுதான்!
வைத்திருந்த பற்றெல்லாம்
வளர்த்திருந்து, தமிழர்மேல்
மொய்த்திருந்த விழிக்கதவு
மூடிவிட்ட நாள்இதுதான்!

ஏடென்றும் எழுத்தென்றும்
ஏறுகின்ற மேடையென்றும்
ஓடாய் உழைத்தமகன்
ஓய்வெடுத்த நாள்இதுதான்!
ஆக்கத்தில் துணையிருப்பான்
அண்ணன்பல் லாண்டு,எனும்
ஏக்கத்தில் எல்லோர்க்கும்
இடிவிழுந்த நாள்இதுதான்!

வெயில்,மழையைப் பாராமல்
வீதியெங்கும் தமிழ்மணக்கப்
பயணம் தொடர்ந்தவனின்
பணிமுடிந்த நாள்இதுதான்!
இயக்கம்என்றே இயங்கிவந்த
எம்அண்ணா, தன்சுமையை
உயிர்க்கலைஞர் தோள்களிலே
ஒப்படைத்த நாள்இதுதான்!

தன்னைச் சுமந்துபெற்ற
தாய்,உயிரோ டிருக்கையிலே
மன்னன் புகழுடம்பை
மண்சுமந்த நாள்இதுதான்!
பொன்சுமந்த இதயமகன்
போனதெண்ணி விழிகளிலே
தென்னக நதியனைத்தும்
திரண்டுவந்த நாள்இதுதான்!

ஏ!தாழ்ந்த தமிழ்நாடே!
எனக்கொதித்த இனமீட்புத்
தூதுவனை ஐயகோ!
தொலைத்துவிட்ட நாள்இதுதான்!
ஈரா யிரம்ஆண்டு
இரவுகளின் உறக்கத்தை
“ஓர்இரவில்” கலைத்தமகன்
உறங்கிவிட்ட நாள்இதுதான்!

“ஆரியத்தின் மாயை”யினை
அம்பலப் படுத்தி,இருள்
வீரியத்தை விந்தியத்துக்
கப்பாலே விரட்டியநம்
சூரியனைக் காஞ்சிதந்த
சொக்கத்தங் கத்தை,மலர்த்
தேர்சுமக்கப் பொறுக்காமல்
பார்அழுத நாள்இதுதான்!

பத்திரமாய் அழைத்துவந்துப்
பயணத்தின் நடுவழியில்
தத்தளிக்க நம்மையெலாம்
தவிக்கவிட்டுப் போனவனைக்
கத்து கடற்கரைக்கே
கையளித்தோம் நாங்களென்று
தத்துஅளித்த நாள்இதுதான்!
தமிழ்துடித்த நாள்இதுதான்!

வையம் அழிந்தாலும்
வானிடிந்து வீழ்ந்தாலும்
மெய்நடுக்கம் கொள்ளாத
மேதகுநம் பெரியார்!ஆம்!
கை,தலையில் அடித்தபடி
கருஞ்சட்டை நனைந்தபடி
ஐயா பெரியாரே
அழுததுயர் நாள்இதுதான்!

எண்ணியதைச் செய்தவனை
இனஉணர்வை நெய்தவனை
அண்ணனை,நம் உள்ளொளியை
அந்தோ! இழந்துவிட்டு
மண்ணில் திசையெட்டும
மக்களெல்லாம் விம்மிவிம்மிக்
கண்ணீர் மழைபொழிந்து
கதறியநாள் இதுவேதான்!

அன்றும் அழுதோம்நாம்!
அவர்நினைவு நாளினிலே
இன்றும் அழுவோமோ?
இல்லைஇல்லை! விழியிரண்டில்
ஊற்றெடுக்கும் கண்ணீரை
ஒதுக்கிப் புறந்தள்ளி
ஆற்றல் மறவரெல்லாம்
அணிவகுத்துப் புறப்பட்டே,

“அண்ணா!நீ மூட்டியதீ
அணையவில்லை! அச்சுடரைக்
கண்ணாக விளங்கியநம்
கலைஞர்,பே ராசிரியர்
தன்னுரிமை கொண்டளித்தார்
“தளபதி”யின் கைகளிலே!
முன்,அவர் நடக்கின்றார்!
முழக்கமிட்ட படி,அவரைப்

பின்தொடரும் தம்பியரின்
பேரணி,உன் “சீரணி”யாம்!
வென்றிடுவோம்! மொழிப்பகையை
வேரறுப்போம்! இதுஉன்மேல்
ஆணை! தமிழ்த்தாய்மேல்
ஆணை! எமையீன்ற
மாணுறுசெந் தமிழ்நாட்டு
மண்மீதில் ஆணை!எனத்

தேடிவைத்தப் பேரறிவுச்
செல்வத்தை, அண்ணாவை
மூடிவைத்த கல்லறைக்கு
முன்நின்று சூளுரைப்போம்!
பொடிவைத்துக் கருத்துக்குள்
புதிர்வைத்து, மடமைக்கு
வெடிவைத்த நம்அண்ணா
வேறெங்கும் போகவில்லை!

கொடிவைத்து நமைக்காக்கும்
கொற்றவராம் “தளபதி”யின்
வடிவத்தில் நம்முன்னே
வாழ்கின்றார்! ஆள்கின்றார்!
ஆமாம் இருக்கின்றார்!
அண்ணன் சிரிக்கின்றார்!
நாமேன் அழவேண்டும்?
நடைபோடு செந்தமிழா!

**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**

